# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 18 வியாழக்கிழமை 28.01.2024 கதிர் 86


# பெப்ரவரி 4 கரிநாள் பேரணியில் பங்கேற்க அணி திரண்டு வாரீர்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 தமிழர்களின் கரிநாள் என்று அறிவித்து, அன்றையதினம்கிளிநொச்சியில் நடக்கவுள்ள பேரணியில் கலந்துகொள்ள அணி திரண்டு வருமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பில்அந்தஅமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பிரித்தானியகாலனித்துவத்தின் பிடியிலிருந்து சிறிலங்கா, 04.02.1948 அன்று விடுதலை பெற்றநாள்தமிழ்த்தேசியஇனம் திறந்தவெளிசிறையில்இடப்பட்ட நாள். ஒட்டுமொத்த

☞ 2

# இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் அக்கப் போர் இன்னும் முடிந்தபாடில்லை. கட்சியின் தேசிய மாநாடு இன்னும் நடத்தப்படவில்லை. பகீரதப் பிரயத்தனத்துக்கு மத்தியில்தான் அந்தத் தேசிய மாநாட்டை ஒருவழியாக இந்த ஆண்டு ஜனவரி 28 நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆனால் கடைசித் தருணத்தில் அது தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது.

அதை மீண்டும் நடத்துவதுற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி பயனளிக்கவில்லை. ஜனவரி 27 நடந்த பொதுக் குழுக் கூட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்களுக்குப் பின்னர், மாவை சேனாதிராசாவின் வீட்டில் இடம்பெற்ற சிறீதரன் - சுமந்திரன் சந்திப்பில் இணக்கம் ஏதும் எட்டப்படாததே இதற்குக்

☞ 2

# பெற்றோலின் விலை நள்ளிரவு அதிகரிப்பு

பெற்றோல்விலை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனமும்ஐ.ஓ.சி. நிறுவனமும் விலை அதிகரிப்பைக் கூட்டாக அறிவித்துள்ளன.

அதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 371 ரூபாவாகும்.

☞ 2

# பேராதனை மாணவர்களின் போராட்டமும் நேற்று கலைப்பு

## கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல்

வற் வரி அதிகரிப்பு மற்றும் மாணவர்கள் மீதான அடக்குமறை என்பவற்றைக்கண்டித்து பேராதனை பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றுநடத்தியபோராட்டத் தின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

பேராதனை பல் கலைக்கழக மாணவர் விடுதிக்கு அருகில் தொடங்கியஆர்ப்பாட்டம், கலஹா சந்திக்கு வந்த போதுஅதனைக்கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசித் தாக்கினர்.

இதனையடுத்து பொலிசாருக்கும் மாண வர்களுக்கும் இடையில் சற்று நேரம் வரை முறுகல்நிலைஏற்பட்டது.

செவ்வாய்க்கிழமை கொழும்பில் எதிர்க் கட்சியினரின்ஏற்பாட்டில் நடந்தபோராட்டத்தையும் பொலிஸார்பதினைந்தே நிமிடங்களில்கண்ணீர்ப் புகை மற்றும்

☞ 8

# தமிழ் அரசுக் கட்சித் தலைவரை பதவியேற்க சுமந்திரன் அழைப்பு

## பொதுக் குழுக் கூட்டத்தில் நடந்தவைகள் குறித்தும் விளக்கம்

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிவஞானம் சிறீதரனை உடனடியாகப் பதவியேற்கும்படி அவரது போட்டியாளரான சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

"எமது வரலாற்றில் முதன்முறையாக வாக்கெடுப்பினாலே தெரிவுசெய்யப்பட்ட தலைவராகிய நீங்கள் அப்படியான அதற்குகந்த விமர்சையோடுவைபவ ரீதியாக பதவியேற்பது முக்கியமான

☞ 8

# கெஹலியவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் ஐவர் நேற்று கைது

கெஹலிய ரம்புக்வெல்லவை கைது செய்யுமாறு கோரி 'கெஹலியகோவில்லேஜ்' என்ற போராட்டத்தைக் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முன்பாகஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் ஐவரை பொலிஸார் கைது செய்தனர்.

நோய்எதிர்ப்புமருந்து தொடர்பான வழக்கில் இரண்டாவதுதடவையாக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் வாக்குமூலங்களைப் பெறுமாறு சட்டமா அதிபர்குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி குற்றப் புலனாய்வு திணைக் களத்திற்கு வந்து வாக்குமூலம் வழங்குமாறு முன்னாள் சுகாதார அமைச்சருக்கு விசாரணை அதிகாரிகள் அறிவித்திருந்தனர். ஆனால்,அமைச்சர்

☞ 8

# கொச்சியிலிருந்து கொழும்புக்கு நேரடி எரியாவு குழாய் அமைப்பு

## பணிகள் தொடக்கம் என்கிறார் இந்தியத் தூதுவர்

இலங்கையில் மின்சாரக் கட்டணத்தை குறைக்க கொச்சியிலிருந்து கொழும்பு வரை திரவஇயற்கைஎரிவாயுக் குழாய் அமைக்கும் பணியை இந்தியா மேற்கொண்டு வருவதாக இலங்கைக்கானஇந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இந்தியாவின் 75ஆவது குடியரசு தினத்தையொட்டி, இந்தியா ஹவுஸில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் அவர் இந்த விடயத்தை கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவிற்கு மின்சாரம்ஏற்றுமதிசெய்வதற்கு இலங்கையைத் தயார்படுத்தமின்கட்டண இணைப்புசெயற்திட்டம் மேற்கொள்ளப்படும் அதேநேரம், இலங்கையில் மின்சார செலவைக் குறைக்க

☞ 2

# கடவுச் சீட்டுக் கட்டணம் இன்று முதல் உயர்வு



கடவுச்சீட்டு வழங்கும்போதுபொதுசேவைகளுக்கான கட்டணம் இன்றுமுதல் அமுலுக்கு வரும்வகையில்100வீதம் அதிகரிக்கப்படவுள்ளது.

குடிவரவுத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 5000 ரூபாய் கட்டணம் 10,000 ரூபாயாகஉயர்த்தப் பட்டுள்ளது.

மேலும், கட்டண உயர்வு ஆன்லைன் மற்றும் ஆன்லைன் அல்லாத சேவைகளுக்கு செல்லுபடியாகும்என்றும் அந்தஅறிவிப்பில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இருபாலை இளைஞன் திடீர் மறைவு ஹெரோயின் பாவனையே காரணம்

இருபாலை தெற்கைச் சேர்ந்த இளைஞன் நேற்றுத் திடீரென உயிரிழந்தார். அதிக ஹெரோயின் பாவனையே அவரது இறப்புக்குக் காரணம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

யாழ். மாவட்டம், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இருபாலை தெற்கைச் சேர்ந்தகணேசன்நிஷாந் (வயது 29) என்பவரே உயிரிழந்துள்ளார். செவ்வாய்க்கிழமை இரவுஉணவருந்திவிட்டு தூக்கத்திற்கு சென்றவர் பின்னர் எழவில்லை.

நேற்று அதிகாலை 4 மணியளவில் அவரை அவதானித்த வீட்டிலிருந்தோர் அவரிடம் எந்த அசைவும் காணப்படாததை அடுத்து உடனடியாக யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு

☞ 2

# அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் செயற்கை நுண்ணறிவுக் கற்கைநெறி

## தொடங்க முடிவு என்கிறார் அரசுத் தலைவர்

கல்விஅமைச்சருடன் கலந்துரையாடிஅனைத்து பல்கலைக்கழகங்களிலும் செயற்கை நுண்ணறிவு தொடர்பிலான கற்கை நெறிகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம் என்று அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கதெரிவித்தார்.

களனி பல்கலைக் கழகத்தின் பாலி மற்றும் பௌத்த பட்டப் படிப்பு பிரிவின்புதியகட்டடத்தை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார். அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

வாழ்க்கைப் போராட்டத்தை வெற்றிகொள்ள புத்த பெருமானின் போதனைகள்மிகமுக்கியமானது. அத்தகைய தர்மத்தின் ஆழத்தை அறிந்து அதனை உலகிற்கு கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு தேரவாத பௌத்தத்தின் கேந்திர நிலையமாக விளங்கும் இலங்கையைச் சார்ந்துள்ளது.

அதற்காக தேரவாத பௌத்தஆய்வுநிறுவனம் ஒன்றை நிறுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது. இவ்வாறான நிறுவனங்களுக்கு தேரவாத பௌத்தத்தை உலகிற்கு கொண்டுச் செல்லவும், பௌத்த நாடுகளுடனான தொடர்புகளைப்பலப்படுத்திக்கொள் வதற்குமான இயலுமை உள்ளது.

தொழில்நுட்ப யுகத்திற்கு தேவையான வகையில்இலங்கையின் கல்வியை பலப்படுத்த எதிர்பார்ப்பதோடு, அனைத்து பல்கலைக் கழகங்களிலும்செயற்கை நுண்ணறிவு கற்கை நெறிகளை

☞ 2

# ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பயணத்தை அரச பயங்கரவாதத்தால் நிறுத்த முடியாது

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் சூளுரை

அரசபயங்கரவாதம், அரச மிலேச்சத்தனம், அரச வன்முறை, அரச கெடுபிடிகள் மூலம் ஐக்கிய மக்கள் சக்தியின் பயணத்தை தடுத்து நிறுத்த முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 73ஆவது கட்டமாக, மாத்தறை திக்வெல்ல மின்ஹாத் தேசிய பாடசாலைக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களைவழங்கும்நிகழ்வில் நேற்றுக்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

உயர்தரம்கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மற்றொரு சமூக சேவை நிறுவனம்மூலம்ஊதியம் வழங்கப்படும்

☞ 2

## இனி இது .....

காரணம். பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை நிராகரித்து, குழப்பம் விளைவிப்போருக்கு ஆதரவாக - அதாவது கட்சியின் மட்டக்களப்பு மற்றும் கொழும்பு மாவட்ட உறுப்பினர்கள் பலருக்கு -ஆதரவாக-மீண்டும்கட்சிநிர்வாகிகள் தெரிவை நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் மாவையரும் சிறீதரனும் இருக்க அதற்கு ஒத்துழைக்க முடியாது, தெரிவு சட்டப்படி நடந்த ஒன்று என்ற நிலைப்பாட்டில் சுமந்திரன் இருக்க இணக்கம் ஏற்படவில்லை.

இதையடுத்து தனது மகனின் திருமணத்திற்காகத் தான் சிங்கப்பூர் செல்கிறார் என்பதால் பெப்ரவரி 10 தான் திரும்பி வந்த பின்னர் இந்த விடயத்தைப் பற்றிப் பார்த்துக்கொள்ளலாம் என்று ஒத்தி வைத்துவிட்டார் மாவையர். புதிய தலைவரான சிறீதரனும் அதனை ஏற்றுக்கொண்டார். இதனால் கட்சி இப்போது திரிசங்கு சொர்க்கத்துக்குள் மாட்டிக் கொண்டது. புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டும், புதிய செயலாளர் தெரிவு செய்யப்பட்டும் கட்சிக்குத் தலைவரும் இல்லை, செயலாளரும் இல்லை என்கிற நிலைதான். அதேநேரம் பழைய தலைவரும் செயலாளரும்கூ-ட கட்சிப் பொறுப்புக்களில் இல்லை என்கிற நிலையில் ''சொப்பன சுந்தரியை இப்ப யார் வச்சிருக்கிறா?" என்கிற கவுண்டமணி - செந்தில் நகைச்சுவை மாதிரி கட்சியை இப்போது யார் வைத்திருக்கிறார் என்கிற கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில் ஜனவரி 27 நடந்த பொதுக் குழுக் கூட்டத்தில் நடந்த தெரிவுகளை நிறுத்தவோ, மீண்டும் தெரிவுகளை நடத்தவோ தான் இணங்கப் போவதில்லை என்கிற முடிவை சுமந்திரன் நேற்று தலைவர் சிறீதரனுக்கு அனுப்பிய கடிதத்தின் மூலம் உணர்த்தியுள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் புதிய தலைவரான சிறீதரன் உடனடியாகப் பதவி ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். அதேநேரத்தில் அந்தக் கூட்டத்தில் என்ன நடந்து என்பதையும் தமிழ் மக்களுக்குப் பகிரங்கப்படுத்தியுள்ளார். இதுவரை ஊடகங்கள் மூ-லம் வெளிவந்த விடயங்களை அறிக்கைப்படுத்தி அவர் தலைவருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். அவரது நிலைப்பாட்டின்படி, ஜனவரி 27 பொதுக்குழுக் கூட்டம் முடிந்த முடிபு.

கட்சியின் யாப்பின் விதிகளின் படிதான் அந்தக் கூட்டத்தின் ஒவ்வொரு விடயமும் நடந்தேறியது என்பதையும், அதனால் அது முற்றுமுழுதாக சட்டபூர்வத் தன்மையைக் கொண்டுள்ளது என்பதையும் கடிதத்தில் தெளிவாகக் காட்டியுள்ளார். அதன் பொருள், அந்தக் கூட்டத்தை யாராவது ரத்துச் செய்ய முயன்றால் அதன் சட்டபூர்வதன்மையை நாடி அவரோ அல்லது அவரது அணியினரோ நீதிமன்றத்திற்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு என்பதுதான்.

இந்த விவகாரத்தை மாவையர், சிறீதரனுடனான சந்திப்பிலேயே சுமந்திரன் சுட்டிக்காட்டிவிட்டுத்தான் வந்திருந்தார். அதனையே அவர் தற்போது தெளிவாக அறிக்கை வடிவில் வெளிப்படுத்தியுள்ளார்.

கட்சித்தலைவரோ குழப்பத்தை ஏற்படுத்தித் துள்ளிக் குதிக்கும் மட்டக்களப்பு மற்றும் கொழும்பு ஆட்களானதனது ஆதரவாளர்களை எப்படியாவது சமாளிக்கும் வகையில் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியையாவது மாற்றி பிரச்சினையை ஒரு வழியாகச் சமாளிக்கலாம் என்கிற நிலைப்பாட்டில் இருக்கின்றார் என்று தெரிகிறது. ஆனால், ஒரு சட்டப் போராட்டத்தை எதிர்கொள்ளாமல் அதெல்லாம் சாத்தியமாகும் போன்று தெரியவில்லை.

சுமந்திரன் தனது கடிதத்தின் தொடக்கத்திலேயே இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஜனவரி 21 தலைவர் தேர்தலுக்கான பொதுக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டபோதும் யாப்புக்குப் புறம்பாக பொதுக் குழு உறுப்பினர்களாகப் பலர் நியாயமற்ற முறையில் நியமிக்கப்பட்டமை உட்படப் பல விடயங்கள் முறையற்றதாக இருந்தபோதும் தானும் இணைந்து அதனை ஏற்றுக்கொண்ட பின்னர், அந்தத் தேர்தலில் தோற்றதற்காக முன்னையதை எல்லாம் தான் எப்படிப் பிரச்சினையாக்கி குழப்பம் விளைவிக்கவில்லையோ அப்படியே இந்த விடயத்திலும் குழப்பம் விளைவிப்போரின் கருத்துக்கள் புறந்தள்ளப்படவேண்டும் என்பதையும் அவர் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்.

எனவே இந்த விடயம் அவ்வளவு இலகுவாக இப்போதைக்குத் தீர்க்கப்படும் போன்று தெரியவில்லை. தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவருக்கு தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்னர் கட்சிப் பிரச்சினையைத் தீர்ப்பதே பெரிய 'டாஸ்காக' இருக்கும் போல.... "ஸ்........பா...... இப்பவே கண்ணக்கட்டுதே...'' என்கிற வடிவேலுவின் நகைச்சுவை வசனங்கள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பெப்ரவரி 4...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டினுடைய இறைமை, ஆட்சியதிகாரம் அனைத்தும் தனித்தே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கைகளிலே ஒப்படைக்கப்பட்டமை என்பது தமிழினம் மீதான தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளிற்கே வழிகோலியது என்பதோடு, 2009 ஆண்டு இனப்படுகொலை எனும் கோரமுகமாய் வெளிப்பட்டதென்பதும் யாவரும் அறிந்ததொன்றே'

சிறிலங்காவின் சுதந்திரத்திற்கு முன்னர் இருந்தே தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பென்பது சிங்கள குடியேற்றத் திட்டங்கள், இராணுவ மயமாக்கம் முதற்கொண்டு தொடங்கிய இனவழிப்புச் செயன் முறை, 2009 ஈழப்போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தை சூறையாடுவதில் மேலும் தீவிரநிலை கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் பெப்ரவரி 04, 2024 ஐ கறுப்புநாளாக பிரகடனப்படுத்தி, பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து கறுப்புதினப் பேரணியினை முன்னெடுக்க அழைப்பு விடுக்கின்றோம்.

1. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு, தமிழர் தாயகத்தின் மீதான திட்டமிட்ட சிங்கள - பௌத்த குடியேற்றங்கள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாடு பாதுகாக்கப்படவேண்டும். குறிப்பாக தற்போது கையறு நிலையில் உள்ள கிழக்கு மாகாணம் மீதான ஆக்கிரமிப்புக்கள் தாமதமேதுமின்றி முடிவுக்கு கொண்டு வரப்படவும் வேண்டும்.

2. ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் வழிநடத்துவதற்கும் சுயநிர்ணய உரிமை உடையவர்களாவர் என்பதை ஏற்று ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3. தமிழ் மக்களிற்கான அரசியற் தீர்வு தொடர்பான முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டினை அடியொற்றியே முன்னெடுக்கப்படவேண்டும். சிறிலங்கா ஒற்றையாட்சி அரசமைப்பிற்குட்பட்ட பதின்மூன்றாம் திருத்தத்தினை முற்றாக நிராகரிக்கின்றோம்.

4. தமிழர் தாயகத்தில் முடிவற்றுத் தொடரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், இராணுவப் பிரசன்னம், சிங்கள - பௌத்தமயமாக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை போன்றவற்றிற்கான உரிய தீர்வுகள் தாமதமேதுமின்றி வழங்கப்படவேண்டும் என்பதோடு, ஆக்கிரமிப்புக்களை முன்னின்று நடத்தும் அரச இயந்திரத்தையும் அதன் நிறுவனங்களையும் கண்டிக்கின்றோம்.

தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந்தும் சூழ்ந்துள்ள பேரினவாதத்தீயிலிருந்து தமிழர் தாயகத்தை காத்திடவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்பிற்காகவும் எதிர்வரும் பெப்ரவரி 4, 2024 ஆம் நாள் கிளிநொச்சி இரணைமடு சந்தியிலிருந்து டிப்போச் சந்திவரை நடைபெறும் கரிநாள் பேரணியில் பங்குகொள்ள உணர்வுடனும் உரிமையுடனும் அழைத்து நிற்கின்றோம் - என்றுள்ளது.

## பெற்றோலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 8 ரூபாவல் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 456 ரூபாவாகும்.

ஓட்டோடீசல் ஒரு லீற்றரின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 363 ரூபாவாகும்.

சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 468 ரூபாவாகும்.

இதேவேளை, மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 26 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 262 ரூபாவாகும்.

## இருபாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றனர்.

அங்கு அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்பதை வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர்.

இந்த உயிரிழப்புத் தொடர்பில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின்போது, நிஷாந் அதிகளவில் ஹெரோயின் உள்ளெடுத்திருந்தமை தெரியவந்தது. அவரது இறப்புக்கு அதுவே காரணம் என்றும் மருத்துவ அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

## ஐக்கிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில், கண்ணீர்ப்புகை, தோட்டாக்கள் மற்றும் நீர்த்தாரைகளுக்குத் தேவையான உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு பணம் செலவிடப்பட வேண்டுமா, இல்லை என்றால் ஆசிரியர் பற்றாக்குறையையும் வளப்பற்றாக்குறையையும் தீர்த்து கல்வித்துறையைக் கட்டியெழுப்புவது குறித்து சிந்திக்க வேண்டுமா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அரச பயங்கரவாதம், அரச மிலேச்சத்தனம், அரச வன்முறை, அரச கெடுபிடிகள் மூலம் ஐக்கிய மக்கள் சக்தியின் பயணத்தை தடுத்து நிறுத்த முடியாது.

220 இலட்சம் மக்களுக்காக வேண்டி, அமைதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் வீதியில் பேராட்டம் நடத்தினாலும், சட்டவிரோத ஆளும் தரப்பின் சட்டவிரோத தாக்குதல்களுக்கு உட்பட வேண்டி ஏற்படுகிறது.

மக்களால் தெரிவு செய்யப்படாத, மக்கள் ஆணை இல்லாத, சட்ட ரீதியான அங்கீகாரம் இல்லாத ஆளும் தரப்புகளே இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்டதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி உட்பட தற்போதைய ஆட்சியாளர்கள் மக்கள் ஆணையில்லாமலயே ஆட்சியை நடத்தி வருகிறது.

கண்ணீர்ப் புகை, குண்டாந்தடிகள், பொலிஸ் மிரட்டல், அரச பயங்கரவாதம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, நாட்டிலுள்ள 10126 பாடசாலைகளில் கற்கும் 41 இலட்சம் மாணவ மாணவிகளின் மனித மற்றும் அடிப்படை உரிமைகளில் கவனம் செலுத்துங்கள்.

குறைபாடுகள், எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து கனம் செலுத்துங்கள். நாட்டின் 220 இலட்சம் மக்களுக்காக வேண்டி, உரத்து குரல் எழுப்பியவர்களின் மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் ஆளும் தரப்பு மீறியுள்ளது.

அரச பயங்கரவாதத்திற்கு மட்டுமே இந்த ஆளும்தரப்பு கெட்டித்தனம் மிக்கது. வருடத்தின் 365 நாட்களும் அரச வன்முறை, அரச பயங்கரவாதம், அரச மிருகத்தனத்தை பிரயோகித்து மக்களின் வாயை மூடச் செய்யும் விடயத்திலயே கெட்டித்தனம் காட்டி வருகிறது.

தெளிவாக, ஐக்கிய மக்கள் சக்தி ஆளும் தரப்பாகும்போது கல்விச் சுதந்திரம் உட்பட அனைத்து சுதந்திரமும் வழங்கப்பட்டு, எந்த சவாலையும் எதிர்கொண்டு, உலகிற்கு ஏற்ற உயர்தர கல்வி முறையை ஸ்தாபித்து, வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கையை முன்னெடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார் - என்றார்.

## கொச்சியிலிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொச்சியிலிருந்து கொழும்பு வரை எல்என்ஜி குழாய்களை அமைப்பதற்கும் இந்தியா பணியாற்றி வருகின்றது.

இந்தியா-இலங்கை இணைப்பு வழித்தடத்தை அமைப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதில் இந்தியா அக்கறையோடு உள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளியாக இந்தியா இருக்கிறது. அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் மிகப் பெரிய வெளிநாட்டு முதலீட்டாளராகவும் இந்தியா இருந்து வருகின்றது.

இந்த நிலையில் பாதுகாப்பு விவகாரங்களில் இலங்கையின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் இந்தியா எதிர்பார்க்கிறது - என்றார்.

## அனைத்துப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுப்படவுள்ளது.

அத்துடன், பாலி மற்றும் பௌத்த பட்டப் படிப்பு நிறுவனத்தில் கற்கும் மாணவர்களின் விருப்பத்திற்கிணங்க மாணவர் விடுதியொன்றை நிர்மாணிப்பதற்கான காணியையும் அரச அனுசரணையும் வழங்க நாம் தயாராக இருக்கின்றோம்.

2019 ஆம் ஆண்டில் இந்த கட்டட நிர்மாணத்திற்கு அடிக்கல் நடுவதற்கு பிரதமராக வந்திருந்தேன். இன்று கட்டடத்தைத் திறப்பதற்கு ஜனாதிபதியாக வந்துள்ளேன்.

கொரோனா தொற்று பரவலால் இந்த கட்டட நிர்மாண பணிகள் தாமதமாகியிருந்தன. வித்யாலங்கார பல்கலைக்கழகத்தின் பாலி மற்றும் பௌத்த நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு ரதனசார தேரர் முன்னெடுத்திருந்த செயற்பாடுகள் சிறப்பானவையாகும். அதேபோல் கொடபிடிய ராஹூல நிறுவனத்தின் தேரரும் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தார். இந்த நிறுவனம் நிறுவப்பட்டு ஐந்து வருடங்கள் ஆகிறது.

பௌத்த நாடுகளில் மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கும் தேரவாத பௌத்தத்தைப் பற்றிய தெளிவை வழங்கக்கூடிய பொறுப்பு எமக்கு உள்ளது. மேலும், இந்த நிறுவனங்களின் மூலம் தேரவாத நாடுகளிடையே உறவுகளை வலுப்படுத்த முடியும்.

மகா விகாரையின் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. லும்பினியில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்ட மாயாதேவி குழுவினரே அந்தப் பணிகளை செய்கிறார்கள்.

அதேபோல பௌத்த தர்மத்தை ஆழமாக ஆராய்வதற்கான ஆய்வு நிறுவனம் ஒன்றை நிறுவ எதிர்பார்க்கிறோம். அது தொடர்பிலான அறிக்கை இவ்வருட இறுதிக்குள் கிடைக்கும்.

அரசு என்ற வகையில் தேரவாத பௌத்தத்தை உலகிற்கு கொண்டுச்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



# தற்போதைய நிலைமையில் எதிர்க்கட்சிக்கு பொறுப்பு அவசியம்

## ஆஷு மாரசிங்க ’அட்வைஸ்



இந்த வருடத்தில் பொருளாதார ரீதியில் நாட்டை ஸ்திரப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து-வரும்போது அதனைக் குழப்புவதற்கே ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு வருகிறது. பொறுப்புவாய்ந்த எதிர்க்கட்சி என்றால் ஒருபோது இந்த சந்தர்ப்பத்தில் ஆர்ப்பாட்டம் செய்திருக்க மாட்டார்கள் என ஐக்கியதேசியக்கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

2024ஆம் ஆண்டு நாடு பொருளாதார ரீதியில் முன்னேறிச் செல்லும் வருடம். அதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை சகித்துக்கொள்ளாத எதிர்க்கட்சி தங்களின் வங்குரோத்து நிலையை மறைப்பதற்காக குறுகிய அரசியல் நோக்கில் மக்களைத் தூண்டி பொருளாதாரத்துக்குப் பாதிப்ப ஏற்படுத்த முடியுமான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அதன் ஓர் அங்கமாகவே கொழும்பில் ஆர்ப்பாட்டம்

அத்துடன் உலகில் பலநாடுகள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டடிருந்தபோது, அந்த நாடுகளின் எதிர்க்கட்சிகள் தங்களின் நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிதன் மூலம் அந்த நாடுகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று கிரீஸ், ஆஜன்டீனா போன்ற நாடுகள் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்நாட்டு எதிர்க்கட்சிகள் அதனை பயன்படுத்திக்கொண்டு அரசியல் இலாபம் தேட முற்பட்டதால் இன்னும் அந்த நாடுகள் வீழ்ச்சியடைந்தே இருக்கின்றன. அதனால் அந்த நாடுகளின் நிலைக்கு இலங்கை ஜனாதிபதி நடவடிக்கை எடுத்ததால் குறுகிய காலத்திலேயே எமக்கு பொருளாதார நெருக்கடியில் இருந்து ஓரளவு மீள முடியுமாகி இருக்கிறது.

அதனால் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்றால், தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கத்துக்குத் தேவையான ஆதரவை வழங்க வேண்டும். ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவும் உரிமைகளுக்காக போராட்டம் மேற்கொளவும் அனைவருக்கும் உரிமை இருக்கிறது. ஆனால் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதேநேரம் வேலை நாளான தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் மக்களை கஷ்டத்துக்கு உள்ளாக்கி கொழும்பில் இவ்வாறு ஆர்ப்பட்டம் மேற்கொள்ள எடுத்த நடவடிக்கையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்றால் இந்த வேலையை செய்திருக்க மாட்டார்கள். - என்றார். (05)

## 60 வயது பெணிடம் தவறான நடத்தை: விசாரிக்கச் சென்றவர் மீது தாக்குதல்

தனது 60 வயது சகோதரியிடம் தவறாக நடந்தார் என்று கூறப்படும் சந்தேகநபரிடம் விசாரிக்கச் சென்ற பெண்ணைத் தடியால் தாக்கி வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 65 வயதுடைய நபராவார்.

இவர் கடந்த டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி 60 வயது பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார். பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் வெளிப்படுத்தாத பட்சத்தில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தனது சகோதரியிடம் தெரிவித்துள்ளார். இந்நிலையில் இது தொடர்பில் சந்தேகநபரிடம் விசாரிக்கச் சென்ற சகோதரியை குறித்த நபர் தடியால் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

சகோதரி பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு இது தொடர்பில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.


இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் பொலி-ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட 60 வயதுடைய பெண் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தசம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீரிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## சமூக விரோதச் செயல்களின் பொறுப்பிலிருந்து அரசியல்வாதிகளை தப்பிக்கவிட முடியாதாம்

### ரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் கூறுகிறார்



பாதாள உலகம் உட்பட பல்வேறு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடும் பலர் சகவாசத்தில் இருப்பதால் அவர்களின் சமூக விரோதச் செயல்கள் தொடர்பான பொறுப்பில் இருந்து அரசியல்வாதிகளை விடுவிக்க முடியாது என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வண. வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டி, பொல்கொல்லபிரதேசத்திலுள்ள அறநெறி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடசாலை புத்தகங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மகாநாயக்க தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

நாட்டை போதைப்பொருளில் இருந்து விடுவிப்பதற்காக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் விசேட அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர் எனவும், அதனை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அனைவரினதும் ஆதரவும் அவர்களுக்குத் தேவை எனவும் அவர் வலியுறுத்தினார்.

சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் சமயக் கல்வி கற்காதவர்களும், துறவிகளின் சகவாசம் பெறாதவர்கள் என்றும் இன்று வாரத்திற்கு இருமுறைகளை மாத்திரமே பாடசாலைகளில் பௌத்தம் கற்பிக்கப்படுவதாகவும், பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அறநெறி பாடசாலைகளுக்கு அனுப்புவதில் ஆர்வம் காட்ட எனவும் மகாநாயக்க தேரர் மேலும் தெரிவித்தார். (05)

## 14.94 பில்லியன் டொலர்களாக 2023 இல் ஏற்றுமதி உயர்ந்தது

2023 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதி வருமானம் 14.94 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் இலங்கையின் பொருள்கள் ஏற்றுமதி 947.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இது கடந்த ஆண்டு ஈட்டப்பட்ட வருவாயை விட 3.08 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகமாகும் என ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மேலும் தெரிவித்துள்ளது.2023 ஜனவரி முதல் டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் ஏற்றுமதிகளின் மதிப்பு 3,080.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

இது 2022 ஆம் ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் 63.1சதவீதம் அதிகரித்துள்ளதுடன் , அதே வேளை ஜனவரி முதல் டிசெம்பர் 2023 வரையிலான பொருள்களின் மொத்த ஏற்றுமதி 9.54 குறைந்துள்ளது. (05)

## இந்திய புலமைப் பரிசில் திட்டத்தில் மருத்துவம், சட்ட கற்கை இல்லை

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், இலங்கைப் பிரஜைகளுக்கான முழு நிதியுதவியுடன் கூடிய சுமார் 200 புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்களைக் கடந்த வாரம் இது தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் குறித்த புலமைப்பரிசில் திட்டங்களில் மருத்துவம், சட்டத்துறை, துணை மருத்துவம், ஆடை வடிவமைப்பு ஆகிய கற்கை நெறிகள் உள்ளடக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கல்வி நிறுவனங்கள் மற்றும் பல் கலைக்கழகங்களில் பட்டப்படிப்பைத் தொடர்வதற்காக இந்த புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய 2024 - 2025 காலப்பகுதியில் பொறியியல், அறிவியல், வணிகம், பொருளாதாரம், வர்த்தகம், மனிதநேயம் மற்றும் கலை போன்ற பாடநெறிகளுக்கு நேரு நினைவு திட்டத்தின் மூலமும், பொறியியல், அறிவியல் மற்றும் வேளாண்மைக்கு முன்னுரிமை அளிக்கும் முதுகலை பட்டப் படிப்புகளுக்கு மௌலானா ஆசாத் திட்டத்தின் ஊடாகவும் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்

### பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை




பொத்துவில் பிரதேசத்தில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் அவதானமாக இருக்குமாறும் அதற்கான சிகிச்சையை பெற்றுக்கொள்ளுமாறும் பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி ஏ.யூ.அப்துல் ஸமட் அறிவித்துள்ளார்.

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மக்கள் மிக அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுள்ளார்.

குறிப்பாக விவசாய செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இந் நோய் அதிகமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகள் தத்தமது பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு நோய் தடுப்பு தொடர்பான மாத்திரைகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

எலிக்காய்ச்சலால் அடையாளம் காணப்பட்டுள்ளவர்களுக்கு மாத்திரைகள் வருவதோடு, விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், கொதித்தாறிய நீரை பருகுமாறு கேட்டுள்ளார்.

காய்ச்சல், தசைகளில் கடுமையான வலி, கண் விழி சிவப்பு நிறம் அடைதல், சிறுநீர் வெளியேற்றம் குறைவடைதல், சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல் இந்நோயின் அறிகுறிகளாகும். - என்றார். (05)

## பாடசாலை மாணவர்களுக்கான காலணி வவுச்சர்களின் செல்லுபடிக் காலம் நீடிப்பு

அரசால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலணி வவுச்சர்களுக்கான செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி பாடசாலை மாணவர்களின் காலணி வவுச்சர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை அனைத்து காலணி விற்பனை நிலையங்களிலும் செல்லுபடியாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## பண மோசடி வழக்கில் சந்தேகம்: ஆசிரியர் அநுராதபுரத்தில் கைது

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு, பரீட்சை மண்டப உதவி மேற்பார்வையாளராக கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண மோசடி குறித்த வழக்கு தொடர்பில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் அவர் கடமையில் இருக்கும்போதே கைது செய்யப்பட்டதாக அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அநுராதபுரத்தைச் சேர்ந்தவராவார்.

தம்புத்தேகம நீதிவான் பண மோசடி வழக்கில் சந்தேக நபரான இந்த ஆசிரியர் தொடர்ந்து நீதிமன்றத்தைத் தவிர்த்து வந்தமைக்காக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கருத்துக் கணிப்புக்களும் யதார்த்தமும்

அரசுத் தலைவர் தேர்தல் நெருங்கி வரும் நிலையில்அதில்யார்வெற்றிபெறுவார்கள்என்கிற ஆர்வம் மக்கள் மத்தியிலும் அரசியல் கட்சிகளின் மத்தியிலும் இருப்பது வழக்கம்தான். இதுபோன்ற நேரங்களில் கருத்துக்கணிப்புக்கள் நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்படுவதும் வழக்கம். பல நிறுவனங்கள் அமைப்புக்கள் ஊடகங்கள் பல ஆய்வுகளை முடிவுகளை வெளிவிடுவதையும் பார்த்திருக்கின்றோம்.

அதுபோன்று இப்போது வ்திருக்கக்கூடிய ஒரு கருத்துக் கணிப்பு முடிவுகள் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்கவே வெற்றிக்கு மிக நெருக்கமாக இருக்கின்றார் என்று தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடக்கவுள்ள அரசுத்தலைவர்தேர்தலில்யாருக்குவாக்களிப்பது என்ற மக்களின் மனோநிலையை அறிவதற்காக டிசெம்பர் மாதம் 'இன்ஸ்டியுட் ஒவ் ஹெல்த் பொலிசி' என்ற அமைப்பு இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முடிவுகள் தேசிய மக்கள் சக்தியின் தலைவருக்கு 50 வீதமான ஆதரவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருக்கு 33 வீத ஆதரவும் ஜனாதிபதி ரணி;ல்விக்கிரமசிங்கவிற்கு 9 வீத ஆதரவும் காணப்படுகின்றது என்று தெரிவித்துள்ளது.

ஆளும் பொதுஜனபெரமுனவின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளருக்கு 8 வீத ஆதரவு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் கணிப்புப்படி 2023 நடுப்பகுதியிலிருந்து அனுரகுமாரதிசநாயக்கவிற்கான ஆதரவு அதிகரித்துள்ளது. எனினும் டிசெம்பரில் வீழ்ச்சி காணப்பட்டது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருக்கான ஆதரவு 2023 செப்டம்பர் மாதத்திற்கு பின்னர் 3 வீதத்தினால் அதிகரித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கானஆதரவுஆறுவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.


இந்தக்கருத்துக்கணிப்பின்படிஅனுரகுமாரவே இலங்கையின்அடுத்தஅரசுத்தலைவர். ஆனால், கருத்துக்கணிப்புக்கள் எல்லாம் அப்படியே நடந்துவிடும்என்றுஎந்தஉத்தரவாதமும்இல்லை. வாக்களிப்புத் தின கருத்துக்கணிப்புக்கள் பலவும்கூடப் பொய்த்துப்போன வரலாறுகளைப் பார்த்திருக்கின்றோம். எனவே இந்தக் கருத்துக் கணிப்பு சொல்வதுதான் அரசுத் தலைவர் தேர்தலின் இறுதி முடிவு என்றும் கொள்ள முடியாது.

தேர்தலுக்கு இன்னும் பல மாதங்கள் இருக்கும் நிலையில்அதற்கிடையில்ஏற்படும்மாற்றங்களும் தேர்தல் நேர வாக்களிப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தும். கடந்த அரசுத் தலைவர் தேர்தலில் 10 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்றவரான அனுர இப்போது திடீரென 50 சதவீத வாக்குகளைப் பெறுமளவிற்கு இலங்கை மக்கள் மத்தியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்கிற கேள்வியை இந்தக் கருத்துக் கணிப்பு எழுப்புகின்றது. அத்தகைய மாற்றங்களைக் கண்கூடாகப் பார்க்க முடியவில்லை என்பதே யதார்த்தம்.


# சமநிலைத் தத்துவமும் திருக்குறளும்

**ம.திருமலை**

மனிதவாழ்க்கையைப்பற்றியஆய்வில் தத்துவஞானிகளும் இலக்கியவாதிகளும் மிகுதியாக ஈடுபட்டனா. மனிதனின் புறநீர்மைகளையும் தேவைகளையும் அறிவியல் நிறைவு செய்கிறது; எனில் மனிதனின் இருத்தல், அவனது அக வாழ்வியல் சிக்கல்கள் போன்றவற்றைக் குறித்துச் சிந்திப்பதும் தீர்வுகளைச் சுட்டிக் காட்டுவதுமான பணிகளை இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகள் மேற் கொள்கின்றன. இவ்வகையில் மனிதனுக்கு மிகுதியும் நெருக்கமான துறைகளாகத் தத்துவமும் இலக்கியமும் திகழ்கின்றன.



பண்டைய கிரேக்க நாட்டில் 'ஸ்டாயிக்வாதம்' என்ற தத்துவத்தை சீனோ




என்ற கி.மு. நான்காம் நூற்றாண்டில் எடுத்துரைத்தான். மனித வாழ்வில் சிக்கல்கள், அவலங்கள், பேரிடாகள், துயரங்கள் முதலியன ஏன் தோன்றுகின்றன என்று ஆராய்ந்து முடிவில் 'உலகில் நோமை, துணிவுடைமை, பொறையுடமை, இயற்கையோடு இணைந்து வாழ்தல் போன்ற பண்புகள் குறைவாக இருப்பதுதான் துன்பங்களுக்குக் காரணம்' என்ற முடிவை உலகிற்குச் சீனோ அறிவித்தான்.

மனிதன் சமநிலை மனத்துடன் வாழ்ந்தால் துன்பங்களிலிருந்து விடுபடலாம் என்று பரிந்துரைத்தான். இது பின்னாட்களில் ஸ்டாயிக் தத்துவம் என்றழைக்கப்பட்டது ஸ்டாயிக் தத்துவம் அடிப்படையான கொள்கைகளை மனித இனத்திற்கு அறிவுறுத்தியது; அவற்றைக் காணலாம் :

மனிதன் மிகு இன்ப நிலையை அடைய, தான் வாழும் உலகத்தை அது இருக்கிற அமைப்பின் படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். தகுதிக் குறைவான ஆசைகள், பழக்கங்கள், விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றிற்கு இரையாகி விடாமல் அவற்றை எதிர்த்து நிற்க வேண்டும். நோமையுடன் வாழ்வது ஸ்டாயிக் தத்துவம் வற்புறுத்திக் கூறும் அடிப்படை. சிறு தவறுகள் கூட இல்லாமல் வியங்களை மதிப்பீடு செய்து அறிய வேண்டும்.

நம்மால் சாதிக்க இயலாத வியங்களில் ஈடுபட்டு வெற்றி காண முயற்சி செய்வதைத் தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களின் தாக்கங்களுக்கு உட்படாமல் இருப்பதற்காக ஸ்டாய்க்வாதிகள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையைப் பரிந்துரை செய்கின்றார்கள்.

ஸ்டாயிக் தத்துவம் மனிதன் நிதானத்துடன் (டெம்பரன்ஸ்) செயல்படுவதை உயா பண்பாகக் கூறுகிறது. இதனை விளக்க ஒரு சான்றினை அது கூறுகிறது. ஒரு ஸ்டாயிக் துறவியின் குடிசை நெருப்புப் பற்றி எரிந்தபோது துறவி எதுவும் செய்யாமல் நாம் வெற்றி பெற இயலாத சூழல்களில் சும்மா இருப்பதே நல்லது என்று இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். .

ஒரு மனிதனின் முன்னேற்றத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் உழைப்பதற்குச் சுயக் கட்டுப்பாடு தேவை. இதுகாறும் கூறப்பட்ட ஸ்டாயிக் கருத்துக்களுக்கு நிகரானவை திருக்குறளில் எவ்வண்ணம் கூறப்பட்டுள்ளன என்பதைக் காண்போம்.

மனிதன் சில விழுமிய நெறிமுறைகளைப் பின்பற்றி இன்பமாகவும் பிற ருக்குப் பயன்படும் முறையிலும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதைத் திருக்குறள் உலகத் தமிழாராய்ச்சிக் கழகம் கண்ட அறிஞா பெருந்தகை வணக்கத்திற்குரிய சேவியா தனிநாயகம் அடிகளாா திருக்குறளையும் ஸ்டாயிக் தத்துவத்தையும் ஒப்பிட்டு ஆராய வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஸ்டாயிக்வாதிகள் கூறும் பண்புகளில் முதன்மையானது வாய்மை என்பதாகும். திருவள்ளுவா 'வாய்மை' என்ற அதிகாரத்தில் வாய்மை என்பதற்குக் கூர்மையான விளக்கம் தருகிறார். மனிதனின் இயல்புகளுள் ஒன்று அறிந்தோ அறியாமலோ தீய சொற்களைச் சில சூழல்களில் பயன்படுத்தி விடுவதாகும். அத்தீய சொற்கள் பல்வேறு எதிர்மறையான மனநிலைகளை ஏற்படுத்திவிடக்கூடும்.

இக்கருத்தினை,

வாய்மைஎனப்படுவதுயாதெனின்யாதொன்றும்
தீமைஇலாதசொலல்என்றுவள்ளுவர்கூறுகிறார்.

வாய்மையுடன் வாழவேண்டும் என்றால் வாய்மை இன்னதென விளக்க வேண்டியது தர்க்க ரீதியான முறைமையல்லவா? திருவள்ளுவர்,

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" என்று அறம் அல்லது
வாய்மை இன்னதென விளக்குகிறார்.

வாய்மை என்ற ஒன்று இருந்தால் உலகத்தில் எவ்விதமான தீமையும் இருக்காது என்பது ஸ்டாயிக் வாதிகளின் கருத்து. இதனை வள்ளுவப்

யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை
எனைத் தொன்றும்
வாய்மையின் நல்ல பிற - என்று கூறுகிறார்.

எனவே வாய்மையைத் தவிர நிலையான பிறிதொன்று இவ்வுலகில் இல்லை என்று வள்ளுவா உறுதிபடக் கருதினாராகலாம். வாய்மையின் முக்கியத்துவத்தை இதைவிட அழுத்தந்திருத்தமாக வேறு எவ்வாறு கூற இயலும்?

ஸ்டாயிக்வாதிகள் கூறும் பிறிதோா இன்றியமையாத கருத்து நிதானம் எனப்படுவதாகும். ஒருவன் தன்னால் எதனைச் சாதிக்க முடியும் என்பதை நிதானித்து அறிந்து கொள்வது வெற்றிக்கு வழி வகுக்கும். 'பொறையுடைமை' என்ற அதிகாரத்தில்,

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம் தம்
தகுதியான் வென்று விடல் - என்று கூறுகிறார்.

இங்கு வள்ளுவா 'தகுதியான்' என்ற சொல் மூலம் நிதானம் என்ற பண்பையே உணாத்துகிறார். நிதானத்தால் துன்பங்களை எளிதாக வென்றுவிடும் வாய்ப்பு ஒரு மனிதனுக்கு ஏற்படும். இதனை வள்ளுவா பெருமான்,

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை - என்று கூறுகிறார்.

ஒருவன் நிதானத்துடன் இருக்கிறான் என்பதை மற்றவா கூறும் அறிவுரைகளைப் பொறுமையுடன் காது கொடுத்து கேட்பதைக் கொண்டு உணரலாம். 'இறைமாட்சி' என்ற அதிகாரத்தில் வள்ளுவப் பெருமான்,

செவிகைப்பச் சொற்பொறுக்கும்
பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த்தங்கும்உலகு - என்றுகூறுகிறார்.

ஸ்டாயிக்வாதிகளின் பிறிதொரு சிறந்த சிந்தனை சுயக்கட்டுப்பாடு ஆகும். ஒருவன் எளிய வியங்களின்மீது ஆசைப்படாமல் இருப்பதே சுயக்கட்டுப்பாட்டு உணாவத் தரும். பேராசை, காமம், அதிகாரம், செல்வம், மீதூண் மீது விருப்பம் போன்றவற்றை விட்டுவிட்டால் சுயக்கட்டுப்பாடு தானே எய்தும்.

இதை 'அடக்கமுடைமை' அதிகாரத்தில் வள்ளுவா மொழிகிறார். ஆமை தன் பொறிகளை வெளியில் தெரியாமல் மறைத்து வைத்திருப்பதைப்போல் மனிதன் தன் புலன்களை அடக்கினால் பல பிறவிகளிலும் இன்பமாக இருக்கலாம் என்று வள்ளுவா கூறுகிறார். அக்குறட்பா,

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து - என்றமைகின்றது.

பொருளாதார நிலையில் சிறந்து விளங்கும் ஒருவன் பணிவுடையவனாக இருப்பது அரிதினும் அரிதான ஒன்றாகும். இதனை,

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்

(9ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# கண்டி, மாத்தளை, நுவரெலியா 10 மாவட்டங்களில் புதிய திட்டம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

'மலைப் பத்தாண்டு' 10 ஆண்டு பல்நோக்கு கிராமபுற மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டம் மாவட்ட அள வில் முன்மொழிவுகளைப் பெறத் தொடங்கியுள்ளது.

மலைப்பத்தாண்டுவேலைத்திட்டம்இந்த வருடம்10 நடைமுறைப்படுத்தப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். அந்த மாவட்டங்கள் கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, களுத்துறை, பதுளை மற்றும் குருநாகல் ஆகும்.

இந்த 10 மாவட்டங்களின் 89 பிரதேச செயலகப் பிரிவுகளில் 4,498 கிராம உத்தியோகத்தர்கள் இதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்காக கடல் மட்டத்திலிருந்து 200 மீற்றருக்கும் அதிகமான உயரத்தில் அமைந்துள்ள பிரதேச தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டத்துக்கான திட்ட முன்மொழிவுகள் பிரதேச மட்டத்தில் தயாரிக்கப்பட்டுஇம்மாத இறுதிக்குள்பிரதேச செயலாளர் குழுக்களின் பரிந்துரையுடன் மாவட்ட குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும்அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கடந்த வெள்ளிக்கிழமை மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் மலைப் பத்தாண்டு அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். மாத்தறை மாவட்ட செயலகத்தில் இது நடைபெற்றது.

மாத்தறை ஒருங்கிணைப்புக் குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நிபுன ரணவக்க மற்றும் தென் மாகாண ஆளுநர் கலாநிதி வில்லியம் கமகே தலைமையில் நடைபெற்றது.

மாத்தறை மாவட்டத்தின் 05 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 214 கிராம அலுவலகர் பிரிவுகளிலும் இந்த வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் இங்கு உரையாற்றினார். அக்குரஸ்ஸ, பிடபெத்தர, முலட்டியான, பஸ்கொட மற்றும் கொட்டபொல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளாகும்.

கிராமத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரசாங்கம் இந்த ஆரம்பித்து வருவதாகத் தெரிவித்த அமைச்சர், மக்களின்பங்களிப்புக்கு முன்னுரிமை அளித்து இது நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

மாத்தறைமாவட்டத்துக்கான அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகள் தொடர்பிலும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. இவ்வருடம் மாத்தறை மாவட்டத்துக்கு அபிவிருத்தி நிதியின் கீழ் 402 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் மலைப் பிரதேசங்களில் வாழும் மக்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மலைப் பத்தாண்டு எனப்படும் பத்தாண்டு கால பல்நோக்கு கிராமப்புற மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டத்தை அரசு முடிவு செய்துள்ளது. இந்த வேலைத்திட்டத்துக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதொகை10,000மில்லியன் ரூபாவாகும். இதன் கீழ் ஒரு பிரதேச செயலகத்துக்கு தலா 100 மில்லியன் ரூபா கிடைக்கும்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 10 முக்கிய அபிவிருத்திப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதாவது வாழ்வாதாரம், சந்தை அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாடு, கல்வி, குடிநீர் வசதி, விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம், மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்கவை, தொலைபேசிமற்றும்இணையம், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் முகாமைத்துவம் மற்றும் வீட்டு வசதிகளை மேம்படுத்துதல் என்பனவாகும்.

மலைப் பிரதேசங்களில் வாழும் பெருந்தோட்டசமூகங்களின்வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு விரைவான மற்றும் திட்டமிடப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்வதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்துக்குமாவட்டமற்றும்பிரதேசக் குழுக்களின் உடன்பாடு கிடைத்ததும், மாவட்டச் செயலாளர்களின் முழு ஈடுபாட்டுடனும், இதர அரசு நிறுவனங்கள் பிரதேசசெயலகங்களின்முழுஆதரவுடனும் கூட்டுத் திட்டமாக செயற்படுத்தப்படும். இந்தத் திட்டத்தை ஜனாதிபதி அலுவலகம், நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சும் மேற்பார்வை செய்கிறது.

இந்நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணாதாச கொடித்துவக்கு, வீரசுமண வீரசிங்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியானந்த, மாத்தறைமாவட்டசெயலாளர் வை. விக்கிரமசிறி மற்றும் அரச அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

(05)

## பழைய இரும்பு சேகரிப்பதாகக்கூறி பொருள் திருட்டு குறித்து முறையீடு

ஆண்கள் வீட்டில் இல்லாத சந்தர்ப்பங்களில் பகல் நேரங்களில் வீட்டில் உள்ள பெண்களிடம் பழைய இரும்பு பொருளகளை சேகரிப்பதாக கூறி வீட்டிலுள்ள பெறுமதியான பொருள்களைத் திருடிச் செல்வதாக பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பழைய போத்தல்கள் , இரும்பு பொருள்கள்மற்றும்பழையபொருள்களை விலை கொடுத்து பெறுவதாக கூறி வீட்டினுள் நுழைந்து இவ்வாறு திருடுவதாக பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

சில சந்தேக நபர்கள் வீட்டில் உள்ள பழைய பொருள்களைப் பார்க்க வேண்டுமென கூறி வீட்டிற்குள் நுழைந்து பெறுமதியான பொருள்களை வாகனங்களில் ஏற்றிச் செல்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மாத்தளை , நாவுல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பழைய சேகரிக்கச் சென்ற நபரொருவர் வீட்டில் இருந்த பெண்ணிடம் அருந்துவதற்கு தண்ணீர் கேட்ட போது குறித்த பெண் தண்ணீரை எடுத்து வந்து பார்க்கும்போது அந்நபர் வீட்டை விட்டு சென்றிருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து குறித்த பெண் வீட்டை சோதனையிட்ட போது வீட்டில் இருந்த பெறுமதியான பொருள்கள் காணாமல் போயிருப்பதை கண்டுபிடித்ததாகப் பொலிஸில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இவ்வாறு வீடுகளுக்குள் வரும் நபர்கள் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்குமாறும் சந்தேகத்திற்கிடமான முறையில் நபர்கள் காணப்பட்டால் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறும் மாத்தளை பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chinse Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# அம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமானத்தின்போது அகற்றப்பட்ட கருங்கற்களை ஏற்றுமதி செய்ய முடிவு!

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகக் கட்டுமானத்தின் போது அகற்றப்பட்டுள்ள கருங்கல் தொகையைத் துரிதமாக ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்குவதற்கும், ஒரு மில்லியன் மெற்றிக்தொன் கருங்கல் தொகையை ஏற்றுமதி செய்வதற்கான இயலுமை மற்றும் பொருத்தப்பாடு தொடர்பான விடயங்களை விதந்துரையுடன் கூடிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நாட்டில் தற்போது கட்டுமான அபிவிருத்திகளுக்குத் தேவையான கருங்கல் தேவை ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால் கருங்கல் அகழ்வு தொழிற்துறையில் ஈடுபடுகின்ற அகழ்வோர் மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூகத்தவர்களின் வாழ்வாதார வழிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட நிலைமையின் கீழ் கருங்கல் ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு வெளிநாட்டு செலாவணியை ஈட்டுகின்ற வேலைத்திட்டமொன்றை குறுகிய காலத்தில் பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகக் கட்டுமானத்தின் போது அகற்றப்பட்டுள்ள கருங்கல் தொகையை தற்போது துறைமுக நகரத்தில் நிர்வாகக் கட்டடத்திற்கு அருகிலும், அம்பாந்தோட்டை புதிய மருத்துவமனைவளாகத்திலும் குவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த கருங்கல் குவியல்கள் துரிதமாக அகற்றப்பட வேண்டியுள்ளது.

சுற்றாடல் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு புவிச்சரிதவியல் ஆய்வுமற்றும்சுரங்கப்பணியகத்தின்கண்காணிப்பின் கீழ் குறித்த கருங்கல் தொகையை துரிதமாக ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்கான வழங்குவதற்கும், ஒரு மில்லியன் மெற்றிக்தொன் கருங்கல் தொகையை ஏற்றுமதி செய்வதற்கான இயலுமை மற்றும் பொருத்தப்பாடு தொடர்பான விடயங்களை ஆராய்ந்து விதந்துரையுடன் கூடிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

(05)

# மோட்டார் சைக்கிளை செலுத்தியவாறு டிக்டொக் செய்த இளைஞர்கள் விபத்து

மோட்டார் சைக்கிளைச் செலுத்திக்கொண்டு கையடக்கத் தொலைபேசியில் டிக் டொக் காணொளி எடுக்க முனைந்த இளைஞர்கள் காரில் மோதி விபத்துள்குள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்து ஹொரணை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தலங்கம பிரதேசத்தை சேர்ந்த 5 இளைஞர்கள் 4 மோட்டார் சைக்கிள்களுடன் கொழும்பு பிரதேசத்தில் இருந்து ஹொரணை பிரதேசத்தை நோக்கி பயணித்துள்ளனர்.

இந்நிலையில் சைக்கிளை அதிக வேகத்தில் செலுத்திச்செல்வதை காணொளி எடுக்க முனைந்த போது இரு இளைஞர்கள் செலுத்திய மோட்டாள் சைக்கிளின் பின்புறத்தில் கார் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த இரு இளைஞர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 5 இளைஞர்களில் 2 இளைஞர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் , ஏனைய 2 இளைஞர்கள் 3 மோட்டார் சைக்கிள்களுடன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் ஓர் தனது மோட்டார் சைக்கிளுடன் தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரகஹஹேன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# 12 லட்சம் குடும்பங்களை வலுவூட்ட எதிர்பார்ப்பு

## அனுப பஸ்குவல் தெரிவிப்பு

புதிய கிராமம், புதிய நாடு, தொழில் முனைவு அரசு என்ற கருத்தின் கீழ், வறுமையில் உள்ள 12 இலட்சம் குடும்பங்களை வலுவூட்ட எதிர்பார்த்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார். ஜப்பான் மொழித் திறன் பரீட்சையில் சித்தியடைந்த 10,000 பேர் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படவுள்ளதாகவும், மேலும் 100,000 பேருக்கு வெளிநாட்டு வாய்ப்புகளை இவ்வருடம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் –

இருபது லட்சம் பயனாளிகக்கு அஸ்வெசும என்ற சமூகப் பாதுகாப்பு நிவாரணத்தை வழங்குவதே இந்த ஆண்டு எமது முக்கிய பணியாகும். ’ புதிய கிராமம், நாடு, தொழில் முனைவு அரசு ’ என்ற கருத்தின் கீழ், வறுமையில் உள்ள 12 லட்சம் குடும்பங்களை வலுவூட்டவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருடம் அதில் 3 லட்சம் பேரை வலுவூட்டும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதன்போது, பயனாளிகளுக்கு பணம் வழங்கும் செயல்முறைக்கு அப்பால், எமது முக்கிய நோக்கம் அவர்களை வலுவூட்டுவதாகும். அதற்காக தற்போதுள்ள பொறிமுறையை மாற்றவும் முடிவு செய்துள்ளோம். அந்த வகையில், வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை வழங்கி வருகின்றோம். ஜப்பான் திறன் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற 10,000 பேரை தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளோம். மேலும் 100,000 பேருக்கு வெளிநாட்டு தொழில்களை வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளோம்.

மேலும், பயனாளிகளுக்கு தொழில்முறை பயிற்சிக்கான ஏற்பாடுகளை வழங்க நாங்கள் தயாராக உள்ளோம். மேலும், விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் ஏற்றுமதிப் பயிர்களைப் பயிரிடவும் ஊக்குவித்து வருகின்றோம். வெளிநாட்டுச் சந்தையை இலக்காக கொண்டு, முக்கியமாக தேயிலை, கறுவா மற்றும் மிளகு உள்ளிட்ட பயிர்கள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நிதியம் ஒன்றை ஆரம்பிக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மேம்படுத்தப்பட வேண்டும். அதன்படி, சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமையாளர்கள் சுமார் 25,000 பேருக்கும் மேற்பட்டோருக்கு அவர்களின் சேவையின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களில் சுமார் 2000 பேருக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் பதவி உயர்வு வழங்கப்படும். சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தை நலன்புரிப் பணிகளுக்காக மாத்திரம் செயற்படும் நிறுவனமாக இல்லாமல் தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் நிறுவனமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நோக்கமாகும். அதேபோன்று, இளைஞர் சமூகத்தை மேலும் தொழில் பயிற்சிக்கு உட்படுத்துவதற்கு சீனாவுடன் மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன’ என்று சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் மேலும் தெரிவித்தார். (05)



## அனைத்துப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல அவசியமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அதனால் சர்வதேச பௌத்த நாடுகளுடனான தொடர்புகள் வலுவடையும்.

அதன் ஒரு அங்கமாக பௌத்த நாடுகளான இலங்கை - தாய்லாந்துக்கு இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைசாத்திடப்படவுள்ளது.

அதேபோல் புதிய தொழில் நுட்பத்தின் வாயிலாகவும் பௌத்த தர்மம் தொடர்பில் தேடியறிவதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

அதற்கு செயற்கை நுண்ணறிவு உதவும். கல்வி அமைச்சருடன் கலந்துரையாடி அனைத்து பல்கலைக்கழகங்களிலும் செயற்கை நுண்ணறிவு தொடர்பிலான கற்கை நெறிகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம்.

தொழில்நுட்பயுகம் ஒரே இடத்தில் ஸ்தம்பித்து நிற்காது. வரலாற்றில் இருந்த அணுகுமுறைகள் இன்று வேறுவிதமாக வளர்ச்சியடைந்துள்ளன.

தொழில்நுட்ப யுகத்தின் தேவைக்கேற்ப இலங்கையில் கல்வி முறையை வலுப்படுத்துவோம். அறிவு மற்றும் பண்புமிக்க சமூகத்தின் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் - என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

## கெஹலிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தில் மற்றுமொரு வழக்குக்காகச் சென்றிருந்தார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சில தவிர்க்க முடியாத கடமைகள் காரணமாக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்குச் சென்று வாக்குமூலம் வழங்க முடியவில்லை என்று அமைச்சரின் ஊடகச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிவிப்பின் பிரகாரம் குற்றப் புலனாய்வு திணைக் களத்திடம் வேறு திகதியை வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேராதனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர்த் தாரைகள் மூலம் தாக்கிக் கலைத்தனர்.

## தமிழ் அரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயமாகும். அதுமட்டுமல்லாமல், தங்களது தலைமையுரையில் எமது மக்களுக்கான விடிவுப் பாதை எப்படியானது என்ற தங்களது யோசனைகளை செவிமடுக்கப் பலரும் காத்திருந்தார்கள். அத்தோடு, எமது மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் பல்வேறு சந்தேகங்களுக்கும் விமர்சனங்களுக்கும் அது முற்றுப்பள்ளி வைத்திருக்கும். ஆகவே, தயவு செய்து காலம் தாழ்த்தாது வெகு விரைவில் அந்தப் பகிரங்க பொது நிகழ்வை நடத்துமாறும் அன்புரிமையோடு நான் கேட்டுக்கொள்கின்றேன்'' என்று அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்களாகவன:

1. மத்தியசெயற்குழுக்கூட்டத்தின் ஆரம்பத்தில் தாங்கள் என்னைக் கூட்டத்தின் பின்புறத்திற்கு அழைத்துத் தனியாகப் பேசிய வேளையில் இரண்டு அணிகளாகப் பிரிந்திருக்கும் கட்சி ஒன்றித்து பயணிக்கவேண்டும் என்ற கருத்தை தாங்கள் சொன்னபோது, அப்படி நிகழ்வதாக இருந்தால் தாங்கள் தலைவராகவும், நான் பொதுச் செயலாளராகவும் இருந்தால் மாத்திரமே அது சாத்தியமாகும் என்று உங்களுக்குச் சொன்னேன். ஆனால், அது முற்றுமுழுதாக உங்களது கையிலேயே இருக்கின்றது என்பதையும் கூறினேன். அப்படியாக

தொடர்ச்சி 9ம் பக்கம்....





# கேப்பாபிலவில் 5ஆவது நாளாக இரு குடும்பங்கள் போராட்டம்

கேப்பாப்பிலவு பகுதியில் வீட்டில் வசிப்பதற்கு பாதுகாப்பு இல்லை, பொலிஸார் நியாயமான நீதியைப் பெற்றுக்கொடுக்கவில்லை எனக் கோரி நீதிவேண்டி இரு குடும்பங்கள் நான்காவது நாளாகத் தொடர்ச்சியாகப் ஈடுபட்டு வருகின்றன.

முல்லைத்தீவு கேப்பாபிலவு கிராமத்தில் சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் அயல் வீட்டு குடும்பஸ்தரால் குறித்த கிராமத்தில் வசிக்கும் இரு குடும்பங்களுக்கும் தொடர்ச்சியாக வாக்குவாதம் இருந்து வந்த நிலையில் அது தொடர்பாகப் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டும் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. இந்நிலையிலேயே கேப்பாபிலவு மாதிரி கிராமம் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக நான்கு நாள்களாகத் தொடர்ச்சியான முறையில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

(நேற்று)ஐந்தாவதுநாளாகத்தொடரும்இவர்களின் போராட்டத்தைக் குறித்த பகுதி கிராம அலுவலரோ, பொலிஸாரோ கண்டுகொள்ளவில்லை. இதுவரை குறித்த போராட்டத்திற்கான நீதி கிடைக்காததால் இரு குடும்பங்களும் வீட்டிற்கு செல்ல முடியாமலும், வீட்டில் இருக்க பாதுகாப்பற்ற நிலையிலும் வீதியிலேயே இருக்கின்றனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபடும் இரண்டு குடும்பங்களை சேர்ந்தவர்கள் கருத்து தெரிவிக்கும் போது குறித்த பகுதி கிராம அலுவலரும் தம்மைக் கண்டு கொள்ளவில்லை எனவும், பொலிஸார் நேரடியாக நீதிமன்றத்துக்கே தம்மை தமக்கு குழந்தைகளும் இருப்பதால் வீதியில் தொடர்ச்சியாக கொசுகடிக்குள் இருக்க முடியாது,வேலைக்கும் செல்ல முடியாது, வருமானமும் இல்லாமல் போக நாம் வீதியிலேயே இருக்கின்றோம். எம் பிள்ளைகள் வீதியிலே போகும்போது எதிராளிகள் துப்புகின்றனர். எல்லாவற்றிற்கும் ஆதாரம் இருக்கின்றது எனவும், எம் உயிர் போக முன்னமே சமாதானமாக வாழ நீதியை பெற்றுதருமாறு கேட்டுக்கொள்கின்றோம் .

இரு குடும்பத்தினரும் போராட்டத்தில் ஈடுபட்ட வேளை வீட்டில் தனிமையில் 14 வயதுடைய இரு சிறுவர்கள் இருந்தபோது பிரச்சினைக்குரிய வீட்டு குடும்பஸ்தர் அங்கு சென்று போதைப்பொருளை வைத்து விட்டு பொலிஸாரை அழைத்துவந்து குறித்த இரு சிறுவர்களையும் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும், அடாவடியில் ஈடுபடும் அயல் வீட்டுக்காரர் மீது பொலிஸில் முறைப்பாடு செய்தும் நியாயம் கிடைக்கவில்லை எனவும் அதற்கான நீதி தமக்கு வேண்டும் எனவும், வீட்டில் இருப்பதற்கு தமக்கு பாதுகாப்பு இல்லை எனவும் கூறி இரு குடும்பங்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# டிக்கோயா நகர சபைக்குள்ளே சுகாதாரச் சீர்கேடு படுமோசம்

நகரமெங்கும்கழிவுகள்அற்புறப்படுத்தாமல் தேங்கியிருந்தால்அது இலங்கையில்ஹற்றன் டிக்கோயா நகர சபைக்குட்பட்ட பிரதேசமாகத்தான் இருக்கும் என்பது அனைவரும் அறிந்த விடயம். கழிவுகளை அற்புறப்படுத்துவதற்கோ அல்லது அவற்றைக் கொண்டு சேர்ப்பதற்கோ இன்னும் ஓர்; இடம் தெரிவு செய்யப்படாமல் இலங்கையில் இருக்கும் ஒரே நகர சபை டிக்கோயா நகரசபையாகும்.



நகரங்கள் மற்றும் அதையண்டிய குடியிருப்புப் பிரதேசங்களில் தான் இந்த நிலைமைகள் என்றால் நகரசபைக்குள்ளேயே குப்பை கூழங்கள் நிரம்பித்தான் உள்ளன. மேலே காணப்படும் மலசல கூடமானது ஹற்றன் டிக்கோயா நகரசபைக்குள்ளே அமைந்திருக்கின்றது. நகரசபைமண்டபத்தை நிகழ்வுகளுக்காகப் பயன்படுத்துபவர்கள் பாவிக்கும் மலசல கூடங்களாகும். இந்த மண்டபத்தைஉபயோகிக்க ஒரு தொகைக் கட்டணத்தை நகர சபை அறவிடுகின்றது. ஆனால் மலசல கூடம் இப்படித்தான் உள்ளது.



இதன் காரணமாகவே பலர் அல்லது மூன்று மணித்தியாலயங்களில்நிகழ்வுகளை முடித்துக்கொண்டு சென்று விடுவர். அதே போன்று நகர சபையின் பின்புறம் கழிவுகள் போடப்பட்டு அகற்றப்படாமல் நெடுநாள்களாக உள்ளன. நகரசபையில் ஒரே ஒரு சுகாதார பரிசோதகரே இருக்கின்றார். தான் பணிபுரியும் கட்டடத்துக்குள்ளே இவ்வாறு இருப்பதை அவர் எவ்வாறு அறியாதிருக்கின்றாரோ தெரியவில்லை.

நகர வர்த்தகர்கள் மற்றும் குடியிருப்புப் பிரதேசங்களுக்குச் சென்று சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தும் நகர சபை சுகாதாரப் பிரிவு தனது கட்டடத்தை வைத்திருக்கின்றது என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

ஹற்றன் டிக்கோயா நகரசபை, கடந்த தீபாவளி பண்டிகைவியாபாரத்துக்காக தற்காலிகக் கடைகளை வழங்கியதன் மூலம் சுமார் 50 லட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது. கடந்தவருடம்ஐம்பதுலட்சம் ரூபா செலவில் ஹற்றன் பஸ் நிலைய வளாகத்தை நகரசபைநிர்வாகம்சீர்படுத்தியது. ஆனால் தனது காரியாலயத்துக்குள்ளே இவ்வாறு ஒரு நிலைமை இருப்பதை நகர சபை செயலாளர் எவ்வாறு கண்டும் காணாதமை இருக்கின்றார் என மேற்படி மண்டபத்தைப் பயன்படுத்துபவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (05)

# சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற முதியவர் திடீர் உயிரிழப்பு




சிவனொளிபாதமலைக்குயாத்திரைசென்ற முதியவர் சுகவீனமடைந்து உயிரிழந்துள்ள நிலையில் அவரது சடலத்தை உறவினர்க ளிடம் ஒப்படைக்க நல்லதண்ணி பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

தலங்கம பிரதேசத்தை சேர்ந்த 70 வயதுடைய முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 14 ஆம் சிவனொளிபாதமலைக்கு யாத்திரைக்கு சென்ற இவர் திடீரென சுகவீனம் அடைந்த நிலையில் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்கான டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்குமாற்றப்பட்டார் . முதியவர் சிகிச்சை பலனின்றி கடந்த 19ஆம் திகதிஉயிரிழந்துள்ளதுடன் இவரை வைத்தியசாலையில் சேர்த்தவரின் தொலைபேசி இலக்கம் வைத்தியசாலைக்கு வழங்கப்படவில்லை என நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர். முதியவரின் சரியான முகவரி மற்றும்தொலைபேசிஇலக்கம் இல் லாத காரணத்தால் இவருடைய சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க பொலிஸார் பொதுமக்க ளின் உதவியை நாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வெளிநாட்டுக்கு சுற்றுலாவா? இலங்கைக்குச் செல்லுங்கள்

## இந்தியர்களிற்கு ஜெய்சங்கர் ஆலோசனை




நீங்கள் சுற்றுலா செல்ல விரும்பினால் இலங்கைக்கு செல்லுங்கள். நான் இதனை விளையாட்டாக சொல்லவில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் தனது உரையில் இலங்கை பொருளாதாரநெருக்கடியை எதிர்கொண்டவேளை இந்தியா வழங்கிய உதவிகளை சுட்டிக்காட்டியுள்ளதுடன் குறித்த சாதகமான உணர்வுகளை இலங்கையர்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் இந்த உதவிகள் முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

உங்களிற்கானஎனதுஆலோசனை என்னவென்றால் அடுத்தமுறை நீங்கள் வெளிநாடொன்றிற்கு சுற்றுலா செல்லவிரும்பினால் தயவு செய்து இலங்கைக்கு செல்லுங்கள் நான் உங்கள் அனைவருக்கும் இதனைத் தெரிவிக்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் சாதாரண பொதுமக்கள்இந்தியாவைமிகவும்உயர்வாகக் கருதுகின்றனர் பாராட்டுகின்றனர் எனத் தெரிவித்துள்ள ஜெய்சங்கர், இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை உலகநாடுகள் கைவிட்டவேளை இலங்கைக்கு கரம் கொடுத்த நாடு இந்தியா எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டேன்ளிபொருள்வரிசைகளை நேரடியாகப் பார்த்துள்ளேன் உணவு அத்தியாவசியப்பொருள்களுக்கான பற்றாக்குறைகளை அவதானித்துள்ளேன் அவ்வேளையில் இலங்கைக்கு உதவமுன்வந்த ஒரேயொருநாடுஇந்தியா எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா இலங்கைக்கு 4.5 பில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளை வழங்கியது அவர்கள் சர்வதேச நாணயநிதியத்துடன் நீண்டநாள்களாகப் பேச்சுகளை மேற்கொண்டனர் அவர்களிற்கு முதலில் உதவிகள் சர்வதேச நாணயநிதியத்திடமிருந்தே கிடைத்திருக்கவேண்டும். சர்வதேச நாணயநிதியத்தின்உதவி3பில்லியன் டொலர்களுக்குக்குறைவானதுஎனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியம் வழங்கியதை விட ஐம்பதுவீதம் அதிகமாக உடனடியாக இந்தியா இலங்கைக்கு உதவிகளை வழங்கியது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# பொது ஜன கட்சி கொள்கைகள் சந்தர்ப்பவாதமாக மாற்றப்பட மாட்டாது

## நாமல் ராஜபக்ச திட்டவட்டம்



எதிர்வரும் பொதுத் தேர்தலை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மிகவும் வலுவாக எதிர்கொண்டு நாட்டை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கட்சியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச வெளிநாட்டில் இருப்பதால் கட்சியின் பொறுப்பை ஏற்பாரா என ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கட்சியின் கொள்கைகள் சந்தர்ப்பவாதமாக மாற்றப்பட மாட்டாது எனவும் நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார். (05)

# பேருவளை வங்கி ஒன்றில் திருட்டு

## சந்தேகநபர் கைது

பேருவளை - காலி வீதியில் பிரதேச செயலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள வங்கி ஒன்றில் திருடிய சந்தேக நபர் பேருவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின் போது நேற்று அதிகாலை 3.45 மணியளவில் சந்தேகநபர் ஒருவர் குறித்த வங்கியின் ஜன்னல் கண்ணாடியை உடைத்து உள்ளே நுழைந்துதிருடியுள்ளநிலையில்காலை 6.30 மணியளவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தசம்பவம்தொடர்பானமேலதிக விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# அம்பாறை வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட்டார் மாவட்ட செயலர்





(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச செயலக பிரிவில்அண்மையில்இடம்பெற்ற வெள்ளப்பெருக்கு நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட இடங்களை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம நேரில் சென்று இட்டார்.

காரைதீவுபிரதேசசெயலாளர் சிவ. ஜெகராஜன் அந்நிலைமை யயை மாவட்ட செயலாளருக்கு எடுத்து விவரித்தார். (05)

# மொறவெள பிரதேச செயலகத்தில் பால்மா பொதிகள் வழங்கும் நிகழ்வு





(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டம் மொறவெள பிரதேச செயலகத்தில் பால் மா பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. பன்குளம் இராணுவ அதிகாரி லெப்.கேணல்பிலிமத்தலாவேயின்அனுசரணையுடன் பிரதிப்பணிப்பாளர் (திட்டமிடல்) ம.துஷ்யந்தனின் வழிகாட்டலுக்கிணங்க பிரதேச செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் மொறவெள பிரதேச செயலகபிரிவில் தெரிவு பயனாளிகளுக்கான பால்மா பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க் கிழமை பிரதேசசெயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது. பிள்ளைகளின் ஊட்டச்சத்தை அதி கரிக்கவும் ஆரோக்கியமான உடல் உள வளர்ச்சிக்கு ஓர் உறுதுணையாகவும் இது அமைகிறது.

இந் நிகழ்வில் மொறவெள உதவி பிரதேச செயலாளர் கே.சத்தியப்ரியா, மொறவெள பிரதேச செயலக கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# சுன்னாகம் கத்திக்குத்துக் கொலை சம்பவ இடத்தில் நேற்று விசாரணை

யாழ்ப்பாணம் - சுன்னாகம் கந்தரோடை பகுதியில் கொலைச் நடந்த பகுதியில் மல்லாகம் நீதிவான், சுன்னாகம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

செவ்வாய்க்கிழமைஇருவரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிவடைந்துள்ளது.

சுன்னாகம்கந்தரோடைப்பகுதியைச் சேர்ந்த சந்திரநாதன் கோபிராஜ் (வயது 36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த போது, அயலவர்களான உறவினர்கள்இருவருக்கும்இடையில் கோழி வளர்ப்பால் பிரச்சினைகள் நிலவி வந்துள்ளன.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமையும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கத்திக்குத்தில் முடிவடைந்துள்ளது.

அதில் கத்திக்குத்துக்கு இலக்கான நபர் உயிரிழந்தமையை அடுத்து , கொலைசந்தேகநபரான57வயதுடைய அயலவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரைசுன்னாகம் பொலிஸார்விசாரணைக்குஉட்படுத்தி வருகின்றனர். (05)

# கல்வெட்டை இடித்து சேதப்படுத்திய குற்றச்சாட்டு ஹென்றி மகேந்திரனுக்கு அபராதம்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை கல்முனை நகரில் எம்.எஸ்.காரியப்பர் வீதி என பெயரிடப் பட்ட நினைவுப்படிகத்தை இடித்து தரை மட்டமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வழக்கில் பிரதிவாதியான ரெலோ இயக்கத்தின் செயலாளர் நாயகமும்கல்முனைமாநகரசபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமாகிய ஹென்றி மகேந்திரனுக்கு 1500 ரூபா தண்டபணமும் 55000 ரூபா நஷ்டஈடும் விதித்து கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2015 ஆண்டு அம்பாறை கல்முனை நகரில் எம்.எஸ்.காரியப்பர் வீதி பெயரிடப்பட்ட நினைவுப்படிகம் ரெலோ இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன் என்பவரால் இடித்து தரை மட்டமாக் கப்பட்டிருந்தது.

இதன் பின்னர்சட்ட விரோதமாக கூட்டம் கூடியமை மற்றும் மாநகர சபைக்கு சொந்தமான உடைமையை சேதப்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் கல்முனை பொலிஸாரால்அவர்கைதுசெய்யப்பட்டு நீதிமன்றப் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

கடந்த 09 வருடங்களாக இவ்வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் செவ்வாய்க்கிழமை குறித்தவழக்குவிசாரணைகல்முனை நீதிமன்ற எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் பாதிக்கபட்ட தரப்பினர் உட்பட ஏனைய தரப்பினரின் விடயங்களை ஆராய்ந்த நீதிவான் எம்.எஸ். காரியப்பர், வீதிப் பெயர் பலகை உடைத்த ஹென்றி மகேந்திரனை குற்றவாளியாக இனங்கண்ட மன்று 1 500 ரூபா தண்டபணமும் 55 000 ரூபா நஷ்டஈடும் வழங்க வேண்டும் என உத்தரவிட்டார். (05)

# தம்பலகாமம் பிரதேச செயலக நடமாடும் சேவை ஏற்பாடுகள்

(ஹஸ்பர் ஏ.எச்)

பிறப்பு,இறப்பு மற்றும் திருமண பதிவுகள் நடமாடும் சேவை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதளுக்கமைய 'புதிய கிராமம்- புதியநாடு' எனும் தொனிப் பொருளின்கீழ் இடம் பெறவுள்ள இவ் நடமாடும் சேவை 2024.02.08 ஆம் திகதி தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இடம் பெறவுள்ளது. இதில் பிறப்பு,இறப்பு,திருமண பதிவுச் சான்றிதழ்கள் இல்லாதவர்களுக்காக சான்றிதழ்களை பெற்றுக் கொடுத்தல் தேசியஅடையாளஅட்டைசிக்கல்களை தீர்த்தல், காணி பிரச்சினைகளுக்கான தீர்வுகளைபெறல்எனபலசேவைகளை பொது மக்கள் அன்றைய தினம் பெற்றுக்கொள்ள முடியும். எனவேபொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (05)

# விவசாய உற்பத்திகளை அதிகரிக்க கிழக்கு மாகாணத்தில் விழிப்புணர்வு





எப்.முபாரக்

கிழக்கு மாகாணத்தின் விவசாய அதிகரிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயத்தில் நவீன தொழில்நுட்பம் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டதுடன், விவிசாய அமைச்சும், ஸ்ரீஊண.பாமயன் - இயற்கை விவசாய விஞ்ஞானி, ஸ்ரீராஜா கணேஷ் - இயற்கை விவசாய ஆலோசகர் ஆகியோருடன் இணைந்து விவசாயிகளுக்கு அவர்களின் விளைச்சலை அதிகரிக்க ஆலோசனைகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# மர்ஹூம் வை.எல்.எஸ். ஹமீட்டின் 'வாழ்வும் பணியும்' நினைவேந்தல்




அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஸ்தாபகச் செயலாளர் மர்ஹூம் வை.எல்.எஸ். ஹமீட்டின் 'வாழ்வும் பணியும்' நினைவேந்தல் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை கல்முனை, பிளாஸா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் கலந்துகொண்டு விடே உரை நிகழ்த்தியதுடன், முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நினைவுரை ஆற்றியிருந்தார்.

மேலும், மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் அமீர் அலி, சிரேஷ்ட பிரதித் தலைவர் சட்டத்தரணி ஹீட், தேசிய அமைப்பாளர் அப்துல்லாஹ் மஹ்ரூப், செயலாளர் நாயகம் சுபைர்தீன், பிரதித் தலைவர் அனீஸ், தேசிய கொள்கைபரப்புச் செயலாளர் (ஜவாத்), பிரதித் தவிசாளர் முத்து முஹம்மட், பிரதி செயலாளர் நாயகம் ஆ.யு. அன்சில், பிரதி தேசிய அமைப்பாளர்தாஹிர், சர்வதேசவிவகாரங்களுக்கான பணிப்பாளர் மாஹிர் உள்ளிட்ட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட புத்திஜீவிகள், கட்சியின் முக்கியஸ்தர்கள், வை.எல்.எஸ். ஹமீடின் குடும்பத்தினர் மற்றும் கட்சியின் ஆதவாளர்கள் என பலரும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்திருந்தனர். (05)

## தமிழ் அரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் இருவரும் இயங்குவது சம்பந்தமாக தங்களுக்குப் பூரண இணக்கப்பாடு உள்ளது என்பதை கூறிய நீங்கள், கிழக்கு மாகாணத்துக்குப்பொதுச்செயலாளர் பதவி கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பை எப்படிப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற வினாவை எழுப்பியிருந்தீர்கள். அதனைக் கூட்டத்தின்போது மற்றவர்களோடு பேசித் தீர்ப்போம் என்றுநான்கூறியபின்னரேகூட்டம் ஆரம்பமானது.

2. கூட்டத்தின் ஆரம்பத்தில் சிரேஷ்ட உப தலைவர் பதவியை தாங்கள் எனக்குக் கொடுப்பதாகபெருந்தன்மையோடு முன்வந்தபோது, நான் அதனை நிராகரித்ததற்கான காரணமும் மேற்சொன்ன எமது கலந்துரையாடல்தான். அதையே நான் கூட்டத்திலேயும் கூறியிருந்தேன். ஒரு பொது இணக்கப்பாட்டை எய்துவதற்கு இரண்டு இலக்குகள் அடையப்பட வேண்டும் என்று நான் அவற்றை அடையாளப்படுத்தினேன்.

ழி) தலைவர் தெரிவிலே பிரிந்திருப்பதாகக் காணப்படும் இரு அணிகளும் ஒன்றுசேர்வது.

ஞு) பொதுச்செயலாளர் பதவி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படுவது.

இந்த யோசனையை ஏற்றுக்கொண்ட தாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன் ஆகியோரோடு உரையாடிவிட்டு திருகோணமலை மாவட்ட கிளைத்

தலைவர்சண்முகம்குகதாசனை 'மட்டக்களப்பின் சம்மதத்தோடு' பொதுச்செயலாளர் பதவிக்குத் தெரிவு செய்வதாக அறிவித்தீர்கள். இதை மத்திய செயற்குழு எவ்வித ஆட்சேபனையுமின்றி ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. இந்த முன்மொழிவை பொதுச் சபைக்கு மத்திய செயற்குழுவின் சிபாரிசாக முன்வைப்பதென்றும் இணங்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக பொதுச் சபையிலே இந்தமுன்மொழிவுக்குப்போட்டியாக மத்திய செயற்குழு உறுப்பினர் இன்னொருவரின் பெயரை யாராவது முன்மொழிந்தால் அந்தப் பெயருக்குரியவர் அந்தப் போட்டியிலிருந்து தான் வாபஸ் பெறுவார்என்றும்இணங்கப்பட்டது.

3. பொதுச்செயலாளர் பதவிக்கு இப்படியாக ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டதன் காரணமாக, மற்றைய பதவி நிலைகளுக்கும் சேர்ந்து ஓர் இணக்கப்பாட்டுக்கு வருமாறு உங்களையும்என்னையும்மத்திய செயற்குழு உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்துகேட்டுக்கொண்டதற்கிணங்க

நாம் இருவரும் மேடையில் அமர்ந்திருந்து இரு தரப்பினரின் பெரும் விட்டுக்கொடுப்புக்களோடு அப்படியானதொருஇணக்கப்பாட்டை எய்தினோம். இதிலே தலைவர் ஸ்தானத்தில் இருந்திருந்தும் கூட பல விட்டுக்கொடுப்புக்களை செய்ய நீங்களும் முன்வந்ததை நான் மனதார மெச்சுகின்றேன்.

4. இதைத் தொடர்ந்து பொதுச் சபை கூடியபோது அமைப்பு விதி 13 (உ) 1. இன்படி தலைமை தாங்கிய நீங்கள் மத்திய செயற்குழுவின் பிரேரணையை பொதுச் சபையில் முன்வைத்தீர்கள். பல வாதப்பிரதிவாதங்கள், சண்டைகள் நிகழ்ந்தாலும்கூட, நீங்கள்மீண்டும் மீண்டும் வலியுறுத்தி மத்திய செயற்குழுவின் யோசனையை தங்களது முன்மொழிவாக பிரேரித்தீர்கள். அதைப் பீட்டர் இளஞ்செழியன் வழிமொழிந்தார். மாற்று முன்மொழிவு எதுவும் இல்லாத நிலையில் பொதுச் சபை இதை ஏற்றுக்கொண்டது. இதை தாங்கள் கையாண்ட விதம் தங்களது ஆளுமையின் வெளிப்பாடு என்பதை அந்த நேரத்திலேயே நான் தங்களைப் பாராட்டியிருந்தேன் என்பதைத் தற்போது பதிவு செய்கின்றேன். மதிய உணவுக்காகக் கூட்டம் கலைந்தபோது, திரும்பவும் கூட வேண்டிய தேவை இல்லை என்று பலர் சொன்னபோது, முன்னாள் தலைவர் மாநாட்டு தீர்மானங்கள் சம்பந்தமாகப்பேசவேண்டும்என்று கூறியதன் காரணத்தால்தான் மதிய உணவுக்குப் பின்னர் மீண்டும் கூட நேர்ந்தது.

5.மதியஉணவுஇடைவேளைக் குப்பின் பொதுச் சபை மீண்டும் கூடியபோது, தங்களால் முன்மொ ழியப்பட்டு, வழிமொழியப்பட்டு, சபை முன்னர் ஏற்ற தீர்மானத்தை இப்போது தமது நிலைப்பாட்டை மாற்றி அதனை நிராகரிப்பதாக ஒரு சிலர் குழப்பம் விளைவித்தனர். வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் தொடர்ச்சியாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். ஏற்கனவே இடைவேளைக்கு முன்னர் சபை ஏற்றுக்கொண்ட தீர்மானத்தை மீண்டும் பரிசீலிக்க முடியாதென்று சொன்னதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால், நீண்ட இழுபறிக்குப் பின் அந்த வாக்கெடுப்பைச் செயலாளர் ஸ்தானத்திலிருந்து நடத்துமாறு தாங்களும் என்னைக் கேட்டுக்கொண்டீர்கள். அப்படி வாக்கெடுப்பை நடத்த என்னைப் பணிப்பதாக முன்னாள் தலைவரும் ஒலிபெருக்கி மூலமாக அறிவித்தார்.

வாக்கெடுப்பு நடத்தப்படுவது முறையற்றது என்ற கருத்தை நான் கொண்டிருந்தபோதும் தங்கள் இருவரினதும் பணிப்புரைக்கமைய இவ்வாக்கெடுப்பை நடத்தினேன். அந்த வாக்கெடுப்பு எவ்வித குழப்பமுமின்றி ஒழுங்காக அவசரமின்றி நடத்தப்பட்டது தாங்கள் அறிந்ததே. மத்திய செயற்குழுவின் முன்மொழிவை ஏற்றுக்கொள்கின்றவர்கள் முதலிலே கைகளை உயர்த்திக் காண்பித்தார்கள். அவை நிரை நிரையாக ஒழுங்காக எண்ணப்பட்டன. நான் அதனை ஒலிபெருக்கி மூலமாக எண்ணுகின்றபோது, வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று கூறியிருந்த கருணாகரன் நாவலனும் கூடவே எழுந்து நின்று உயர்த்தப்பட்ட கைகளை எண்ணி இறுதியிலே அதன் தொகை 112 என்பதை உறுதிப்படுத்தினார்.

அதன் பின்னர், மத்திய செயற்குழுவின்தீர்மானத்தைஎதிர்ப்ப வர்கள் கைகளை உயர்த்தியபோது அவர்களின் தொகை 104 என்று என்னாலும் நாவலனாலும் உறுதிப்படுத்தப்பட்டது. வாக்க ளிப்பை நடத்திவிட்டு நான் வந்து அமர்ந்தபோது அதன் முடிவை அறிவிக்குமாறு நீங்கள் கேட்டுக்கொண்டதற்கமையமீளவும் நான் ஒலிபெருக்கியிடம் சென்று, முடிவைஅறிவித்தேன். அப்படியாகப் அது பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், அடுத்த நாள் அதாவது 28.01.2024அன்றுமாநாட்டுக்காகக் கூடுவோம் என்று அறிவித்ததோடு கூட்டம் உத்தியோகபூர்வமாகக் கலைக்கப்பட்டது.

மத்திய செயற்குழுவினுடைய முன்மொழிவை பொதுச் சபை மதிய உணவு இடைவேளைக்கு முன்னரே ஏற்றிருந்த வேளையில், அது சம்பந்தமாக திரும்பவும் வாக்கெடுப்பொன்று நடத்துவது தேவையற்றதும் முறையற்றதும் என்று நான் கூறியிருந்த போதிலும், அப்படியான வாக்கெடுப்பை ஒரு சிலர் வலியுறுத்துகின்றார்கள் என்ற காரணத்திற்காக அதை நடத்துமாறு என்னைப் பணித்திருந்தீர்கள். அப்படியாகவலியுறுத்தியவர்கள்அந்த வாக்கெடுப்பிலே முற்றுமுழுதாகக் கலந்துகொண்டார்கள். அதுமட்டுமல்லஉயர்த்தியகைகளை எண்ணுகின்ற பணியிலும் சேர்ந்து ஈடுபட்டு அந்த எண்ணிக்கைகளை உறுதிப்படுத்தினார்கள். ஆகவே, அந்தத் தீர்மானம் ஒரு தடவை அல்ல, இரண்டு தடவைகள் அவர்கள் கேட்டுக்கொண்ட முறைக்கு அமைவாகவும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

வாக்கெடுப்பில் கலந்துகொண்ட பிறகு அதில் தோற்ற காரணத்தால் வாக்கெடுப்பு முறை தவறென்று சொல்லுவது முறை கேடான செயலென்பதற்கப்பால் சட்டத்தின் அடிப்படையிலும் அது ஏற்றுக்கொள் ளப்பட முடியாத ஒரு நிலைப்பாடு. வென்றால் முறைமை சரி, தோற்றால்முறைமைபிழைஎன்பது கீழ்த்தரமான செயற்பாடாகும்.

குற்றவியல் சட்டக் கோட்பா டுகளிலே இதனை VOLUNTI NON FIT INJURIA என்பார்கள். இதற்குரிய சிறந்த உதாரணம்: குத்துச்சண்டை மேடைக்குள்ளே தானாக இறங்கிய பிறகு தன்னை மற்றவர் அடிக்கின்றார் என்று குற்றம் சொல்ல முடியாது. குடியியல் சட்டக் கோட்பாடுகளில் இதனை ACQUI-ESCENCE என்றும் ESTOPPEL BY CONDUCT என்றும் சொல்வார்கள்.

எமது கட்சி யாப்பு விதிகளுக்கு அமைவாகவும், சட்டப்படியும் தாங்களே இப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர். 28.01.2024 ஞாயிற்றுக் கிழமையன்று கோலாகலமாக நடைபெறவிருந்த பொது நிகழ்வு தவறான ஆலோசனைக ளின் பேரிலும், கலந்துரை யாடல் இன்றியும், அதிகாரமற் றதும் சட்டத்துக்கு முரணானது மான அறிவிப்பினாலும் துரதிர்ஷ்டவசமாக பிற்போடப்பட் டுவிட்டது - என்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

காலைக்கதிர்
Kalaikkathir

# கல்முனை நகர லயன்ஸ் கழகத்தால் கிழக்கு வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி கோபாலரத்தினம் பாராட்டி கௌரவிப்பு!





( வி.ரி. சகாதேவராஜா)
கல்முனை நகர லயன்ஸ் கழகத்தால் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினம் பாராட்டி கௌரவிக் கப்பட்டார்.

இந் நிகழ்வு கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின்தலைவர்பொறியியலாளர்லயன் எம். சுதர்சன் தலைமையில் அம்பாறை வீதி அபிவிருத்தி திணைக்கள சுற்றுலா விடுதியில் கடந்த (28) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வீதி திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் லயன் பரமலிங்கம் இராசமோகன் ஏற்பாட்டில் இப்பாராட்டு விழா இடம் பெற்றது. கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி காணி அபிவிருத்தி திறன் விருத்தி மகளிர் அபிவிருத்தி நீர் விநியோகதுறைஅமைச்சின்செயலாளராக லயன்கலாநிதிமூ.கோபாலரத்தினம்(மூகோ) இதன் போது பொன்னாடை போர்க்கப்பட்டு பாராட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

செயலாளர்லயன்பாயிஸ்நன்றியுரையாற்றினார்.

# ஆளுநர் தலைமையில் கிழக்கு மாகாண தேசிய சுதந்திர விழா மட்டக்களப்பில்!





( வி.ரி.சகாதேவராஜா)
இலங்கையின் 76வது தேசிய சுதந்திரதினவிழாகிழக்குமாகாணத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்புவெபர்மைதானத்தில் எதிர்வரும் நான்காம் தேதி மூன்று மணிக்கு நடைபெற இருக்கின்ற இந்த சுதந்திர தின விழா தொடர்பான முன்னோடி கூட்டம் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பில் உள்ள ஆளுநர் சுற்றுலா விடுதியில் இந்த கூட்டம் இடம்பெற்றது. கூட்டத்தின் மட்டக்களப்பு வெபர் அரங்கு கல்லடிபாலம் உள்ளிட்ட இடங்களையும் ஆளுநர் தலைமையிலான குழு பார்வையிட்டது.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர்.

சகல மாகாண செயலாளர்களும் கல்வி புலத்தினரும் கலந்து கொண்டார்கள்.

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்தார் சாந்தனின் தாயார்



ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விடுதலையாகிய சாந்தன் நாட்டிற்கு அழைத்து வருவது தொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி ஒரு சில தினங்களுக்குள் பதிலை பெற்றுத் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

குறித்த வழக்கின் தீர்ப்பில் இருந்து விடுதலை செய்யப்பட்டசாந்தன்சுகயீனம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளநிலையில், அவரின்தாய்மற்றும் சகோதர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று(30.01.2024) சந்தித்து, சாந்தன் நாட்டிற்கு வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டுக் கொண்டனர். இதன்போதே, அமைச்சர் டக்ளஸ் தேவானநந்தாவினால் குறித்த உறுதி மொழி வழங்கப்பட்டது.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி புலிச் சின்னம் அணிந்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சமநிலைத் தத்துவமும்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

செல்வாக்கே தகைத்து - என்று மிக மேன்மைப்படுத்திக் கூறுகிறாா.

ஸ்டாயிக்வாதிகளின் இன்றியமையாத பிறிதொரு சிந்தனை சமநிலை (ரெஸிலியன்ஸ்)என்பதாகும். நன்மை , தீமை, பெரியவா , சிறியவா, மகிழ்ச்சி, மகிழ்ச்சி, துன்பம் என்ற அனைத்தையும்உள்ளவாறேஏற்றுக் கொள்ளுதல்சமநிலைஎனப்படும்; எது நடந்தாலும் அதனை உள்ளவாறே ஏற்றுக்கொள்ளும் பக்குவம் தேவை. வள்ளுவப் பெருமான் ,

எண்ணிய எண்ணியாங்கு
எய்துப எண்ணியாா
திண்ணிய ராகப் பெறின் - கூறினார்.

ஒருவன் சமநிலையுடன் வாழ வேண்டுமானால்மனஉறுதிஉடையவனாகஇருக்கவேண்டும். மனத்தைச் சமநிலையில் வைப்பதன் மூலம் இடாப்பாடுகளைஎதிர்கொள்ளவியலும் என்றுஸ்டாயிக்வாதிகள்கூறுகின்றனா. நல்லது நடக்கும்போதும் தீயது நடக்கும்போதும் அவற்றை ஒரே மாதிரியான மனநிலையில், சமநிலையில் நின்று எதிா கொள்ளவேண்டும் என்று கூறுகின்றனா. இக்கருத்தை வள்ளுவப் பெருமான் ,

நன்றாங்கால் நல்லவாக்
காண்பவா அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன் - என்ற அறிவினாவின் மூலம் தெளிவுபடுத்துகிறாா். இயற்கை மனிதனுக்குத் தேவையானவற்றைக் கொடுக்கத் தவறுவதில்லை . இயற்கையை மீறி நாம் எதையும் அடைந்து விட முடியாது. இக்கருத்தை,

வகுத்தான்வகுத்தவகையல்லால்
கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது - என்று வள்ளுவா கூறுவது மனித வாழ்வின் மீது இயற்கையின் மேலாதிக்கத்தைக் கூறுகிறது.

மனிதனின் அடிப்படை இயல்பு எளியவியங்களால்ஈர்க்கப்படுதலாகும். ஒரு மனிதனைச் சீரழிக்கும் முறையற்றகாமம்முதலானவற்றைவெல்ல வேண்டும்என்பது ஸ்டாயிக்வாதிகள், வள்ளுவா இருவரின் கருத்தாகும். ,

காமம் வெகுளி மயக்கம் இவை
மூன்றன்
நாமம்கெடக்கெடும்நோய்-என்று குறிப்பிட்டாா வள்ளுவா.

கிரேக்கச்சிந்தனையாளாகள்மனித இனத்தின்துன்பங்களுக்குக்காரணம் தேடி அலைந்து சில முடிவுகளைக் கண்டு கூறினா. அவாகள் ‘சமநிலை இன்பக் கோட்பாட்டாளாகள்’ என்று குறிப்பிடப்பட்டனா. இவர்கள் கூறிய கோட்பாடுகளைப் படியெடுத்ததைப் போன்று திரு வள்ளுவரின் கருத்துக் களும் அமைந்திருக்கின்றன.

இதற்குப் பொருள், வள்ளுவப் பெருமான்ஸ்டாயிக்கோட்பாடுகளைப் படித்திருந்தாா என்பதல்ல! வள்ளுவா தன்னிச்சையான சிந்தனையாளா. ஸ்டாயிக் சிந்தனையாளாகள் மனித குலத்தின் நலம் பற்றிச் சிந்தனை செய்தனா. வள்ளுவரும்போர்களற்ற, அறிவுநலம் வாய்ந்த , செம்மைப் பண்புகள் நிறைந்த சமூகத்தைக் கற்பனை செய்தார்.

அதன் விளைவாகவே திருக்குறட் சிந்தனைகள் ஸ்டாயிக் சிந்தனைகளுடன் ஒப்புமை உடையனவாகக் காணப்படுகின்றன . ஒப்பிலக்கியப் பேரறிஞரான காலஞ்சென்ற முனைவா க. கைலாசபதி அவாகள் சூழ்நிலைகளும் காரணங்களும் மாறாமல் இருக்கும்வரை விளைவுகளும் மாறாமல் ஒரே மாதிரியாக இருக்கும் என்று கூறினார்.

சமூகம் என்ற சிந்தனையில் ஊறிநின்ற கிரேக்காகளும் வள்ளுவப் பெருமானும் ஒரே மாதிரியாக சூழல்களில் ஒரே மாதிரியாகச் சிந்தித்தனா. எனவே ஒரே மாதிரியான கருத்துக்களை மனித இனத்திற்குக் கொடையாக வழங்கினா.

(நன்றி: தினமணி)

# தும்பளை புனித லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தல விழா ஆரம்பம்

பருத்தித்துறை, தும்பளை புனித லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தல திருவிழா நாளை 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பங்குத் தந்தையும் மறைக்கோட்ட முதல்வரும் திருத்தல பரிபாலகருமாகிய அருட்பணி ஏ.எவ். பெனற் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினமும் மாலை 4.30 மணிக்குச் திருச்செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் நடைபெறும்.

10ஆம் திகதி சனிக்கிழமை வழிபாட்டில் திவ்விய நற்கருணை விழாத் திருப்பலியும், ஆராதனையும், பவனியும் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணியாளர் பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெறும்.

11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கும், 7.00 மணிக்கும் திருவிழாத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். 7.00 மணிக்கு நடைபெறும் திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக்கொடுப்பார்.

திருப்பலியின் நிறைவில் புனித லூர்து அன்னையின்திருச்சொருபப்பவனியும்ஆசீரும்இடம் பெறும் என்று திருத்தல பரிபாலகர் தெரிவித்துள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.02.2024இல் வெளியிடப்பெற்றது.